Arima Nokku

# அரிமா நோக்கு

6:3 அக்டோபர் 2012

ரூ.30

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
6:3 அக்டோபர் 2012

ஜப்பானியக் கவிஞர் பாஷோ
- வ. ஜெயதேவன் 03

'பேரவைக் கதைகள்' எனும் மலேசியச் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் சமுதாயக் கருத்துக்கள்
- பொன்னியம்மா முனியாண்டி, பரமசிவம் முத்துசாமி 05

கலிப்பாவும் தமிழரின் இசை மரபும் - கௌசல்யா சுப்பிரமணியம் 14

காந்தள், தோன்றி, கோடல் - மூன்றும் ஒன்றா?
- இரா. பஞ்சவர்ணம், க. இரவிக்குமார் 24

மொழி ஆராய்ச்சியும் தேச உறவும்
-சுபாசு சந்திரபோசு 27

முதுமை
-வே.ச. திருமாவளவன் 33

இறையனார் அகப்பொருளின் உரை மரபு
- மா. சியாமளாதேவி 36

காலிங்கர் உரை
- இரா. குமரவேலன் 38

இலக்கியவாதி முன் நிறுத்தும் அறவியல்வாதி
- அ. அறிவுநம்பி 59

ஆர். சூடாமணி சிறுகதைகளில் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும்
- செ. கவிதா 63

மொழிக்கல்வியில் தரவகம்
- ஒப்பிலா. மதிவாணன் 66

மற்றும்
நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதை, துணுக்குகள்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## இன்னல் மின்னனுபவம்

தமிழகத்தின் மின்பற்றாக்குறையின் கடுமை ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றாட நுகர்வாகி அல்லற்படுத்திவருகிறது. தலைநகர் சென்னை மட்டும் குறைநேர வெட்டுக்கு உள்ளாகப் பிறபிற இடங்கள் எல்லாம் பதினாறு மணிநேர அளவுக்குப் பக்கமாக மின்சாரம் இழந்து தத்தளித்துவருவதை வெப்பத்தொடு ஊடகங்கள் பரிமாறுகின்றன. உயிர்வாழ்க்கைக்கு அடிப்படையான உழவு நடத்த முடியாமல் வேளாண்மக்கள் கைம்மடங்கிக் கிடக்க, பல்வேறு அன்றாடத் தேவைக்கு உரிய பொருள்கள் படைப்பவர்கள் மனம் முடங்கிக் கிடக்கும் அவலக் காட்சி நெஞ்சில் நெருப்பை நிரப்புகிறது. இயக்கம் இழந்து பெரும் இன்னல்களைத் தமிழகம் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கல்விக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள் வழிபாட்டு இடங்கள் அலுவல் நிலையங்கள் என மக்கள் பயன்பாட்டுக்கு உரிய யாவும் தம் தடுமாற்றத்திற்கு ஒரு மாற்றம் இன்றித் தவித்துவருகின்றன.

பொதுவாக, நம்நாட்டில் நடுவணரசும் மாநிலவரசும் தொலைநோக்குத் திட்டத்தோடு செயல்பட்டுக் கல்வி, மருத்துவம், உடல்நலம், வேலை வாய்ப்பு, தொழில்வளம் என வரிசைப்படும் தளங்களில் செயல்பட்டுக் குறைதீர்த்ததாக இதுவரை வரலாறு இல்லை. எல்லோருக்கும் உணவு, குடியிருப்பு, தண்ணீர், மருத்துவ வசதி, சாலையமைப்பு என்பன அரசுகளின் எண்ணமாகவும் திட்டமாகவும் உண்டா என்பதே வினாக் குறியாக உள்ளது. வாக்குறுதிகள், அறிவிப்புகள், நிவாரணங்கள், இலவசங்கள், இழப்பீடுகள் போன்றவையே போதுமானவை என்னும் அரசியல் பிழையின் பயன் - நாடு முழுவதும் செல்லரித்த எலும்புக் கூடாக மாறியிருக்கிறது.

மாநில அரசுகள் குறித்த கண்ணோட்டம் நடுவணரசை நடத்துகிற கட்சிக்கு ஏற்ப மாறுவது அறமும் ஆகாது; முறையும் ஆகாது. ஒரே கட்சி மாநிலவரசையும் நடுவணரசையும் ஆளும் பொறுப்பில் இருந்தால்கூட நியாயம் வழங்கப்படும் என்கிற நிலை நம் நாட்டில் இல்லை. உரிமைகளை விட்டுக்கொடுத்தும், இழந்தும் சலுகைகளுக்கு இரந்துநிற்கும் நிலையில் மாநிலவரசுகளை வைத்திருப்பதே மைய அரசுக்கு வலிமையாகாது. ஏதோ ஒரு நாள் வெடித்துச் சிதறப்போகும் மக்களாட்சியத்தின் முன்னறிவிப்பாகாவே இதனைக் கருதவேண்டும்.

மீண்டும், தமிழக மின்பற்றாக்குறைபற்றிப் பார்ப்போம். மாநிலத்தில் நிலவும் கடுமையான நிலைமையைக் கருத்தில் கொண்டு தில்லிமாநில அரசு தனக்கு வேண்டாம் எனச் சொன்ன மத்தியத் தொகுப்பு மின்சாரத்தையாவது தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. தென்மாநிலங்களுக்கு அதனை வழங்க ஆற்றல் உள்ள மின்பாதை இல்லையென்று சொல்லி தில்லி அதனை மறுத்தது, வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால்

அரியானா மாநிலத்தில் உள்ள இந்திராகாந்தி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செயப்பட்ட - தனக்கு வேண்டாம் என்று தில்லி அரசு சொல்லிவிட்ட மின்சாரம் ஆந்திராவுக்கும், கேரளத்திற்கும் வழங்கப்படுகிறது - தமிழ்நாட்டுக்கு அனுப்ப எந்த மின்தடம் போதிய வன்தடமாயில்லை என்று சொல்லப்பபட்டதோ அதே தடத்தில்!

இப்படிப்பட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் நடுவணரசு தமிழக அரசை நடத்துபவர்கள் மீதன்று; தமிழ்மக்கள் மீதே நல்லெண்ணம் கொண்டதாக இல்லை என எண்ணத்தோன்றினால் அதில் என்ன பிழை? ◆


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளினும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்

மற்றும்

படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்


# கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/— US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/— US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 10,000/— US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு. இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

**DD in favour of '*Nokku*' payable at Chennai**
**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)**
**S.B. A/c No. 168101000006423**


## அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com
செல்: 9380626448